# கருங்குழி பேரூராட்சி, செங்கல்பட்டு மாவட்டம்
# மறுஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு

**ந.க.எண்.124/2022 நாள்.26.05.2022 (திருவள்ளுவராண்டு 2053)**

1998 ஆம் வருடம் தமிழ்நாடு ஒளிவு மறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டம்
(தமிழ்நாடு சட்டம் 43/1998) கீழ்

கருங்குழி பேரூராட்சிக்காகவும், அதன் சார்பாகவும், 2021–22 ஆம் ஆண்டு தூய்மை இந்தியா திட்டம் 2.0ன் கீழ் பணிகள் செய்ய பதிவு செய்யப்பட்ட ஒப்பந்ததாரர்களிடமிருந்து 08.06.2022–ம் நாள் புதன் கிழமை பிற்பகல் 3.00 மணி வரை நேரிலோ அல்லது அஞ்சல் மூலமோ பேரூராட்சியின் செயல் அலுவலர் அல்லது அவரது அதிகாரம் பெற்றவரால் நிறைவு செய்யப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் பெற்றுக்கொள்ளப்படும். பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் அனைத்தும் அன்று பிற்பகல் 3.30 மணியளவில் அப்போது வருகை தந்திருக்கும் ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் திறக்கப்படும். பணி சம்பந்தமான ஒப்பந்தப் படிவங்களை இவ்வலுவலகத்தில் 07.06.2022 அன்று மாலை 5.45 மணி வரை உரிய தொகை செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். பணி சம்மந்தமான இதர விவரங்களை அலுவலகத்தில், அலுவலக நேரத்தில் நேரில் கேட்டுத்தெரிந்து கொள்ளலாம்.

## 2021–22 தூய்மை இந்தியா திட்டம் 2.0

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு தொகை ரூ. | ஒப்பந்தப்புள்ளி படிவத்தின் விலை ரூ. | பணி முடிக்கும் காலம் |
|---|---|---|---|---|
| 1. | வார்டு எண்.6, வருவாய் ஆய்வாளர் அலுவலகம் அருகில் புதியதாக 9 சீட் கொண்ட சமுதாய கழிப்பிடம் கட்டுதல் பணி. | 13,50,000/– | 6,720/– | 180 நாட்கள் |

## நிபந்தனைகள்

1. கருங்குழி பேரூராட்சியின் மேற்கண்ட அட்டவணையில் குறிப்பிட்டுள்ள பணிகளுக்கு ஒப்பந்ததாரர்கள் மூலம் ஒப்பந்தப்புள்ளிகள் பேரூராட்சி செயல் அலுவலர் அவர்களால் வரவேற்கப்படுகின்றன.
2. ஏற்கனவே பேரூராட்சியின் பணிகள் எடுத்து நீண்ட காலமாக வேலை நிலுவையில் உள்ள ஒப்பந்ததாரருக்கு ஒப்பந்தப்புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது.
3. ஒப்பந்தப்புள்ளிகள் மூடி முத்திரையிட்ட உறையில் வேலையின் பெயர் மற்றும் ஒப்பந்ததாரர் பெயர் முகவரி தெளிவாக எழுதி சமர்ப்பித்தல் வேண்டும்.
4. ஒப்பந்தப்புள்ளியில் அடித்தல், திருத்தல் இருந்தால் அதனை சம்பந்தப்பட்ட ஒப்பந்ததாரர் கையொப்பமிட்டு உறுதி செய்தல் வேண்டும்.
5. தரப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் காரணம் ஏதுமின்றி நிராகரிக்க செயல் அலுவலர் அவர்களுக்கு அதிகாரம் உண்டு. ஒப்பந்தப்புள்ளிகள் குறிப்பிட்ட வேலைகளுக்கு விவரங்களை அலுவலக நேரத்தில் விவரம் கேட்டு தெரிந்து கொள்ளலாம்.
6. பணி துவங்குவதற்கு முன்னர் ரூபாய் 20/– மதிப்புள்ள முத்திரைத்தாளில் பேரூராட்சியுடன் உடன்படிக்கை செய்து கொள்ள வேண்டும்.
7. பணி செய்து முடித்தவுடன் அளவுகள் மற்றும் மேலளவுகள் செய்து அளவு புத்தகத்துடன் பட்டியல் தயாரித்த பின்னர் விதிமுறைகளுக்கு உட்பட்டு பேரூராட்சியின் நிதி நிலைமைக்கேற்ப முன்னுரிமை அடிப்படையில் தொகை பட்டுவாடா செய்யப்படும்.

8. ஒவ்வொரு பணிக்கும் அதன் எதிரில் குறிப்பிட்டுள்ள டேவணித்தொகையை ரொக்கமாகவோ அல்லது உள்ளூர் வங்கி வரைவோலையாகவோ “செயல் அலுவலர் கருங்குழி பேரூராட்சி “என்ற முகவரிக்கு செலுத்தப்பட வேண்டும். ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்ட நாளிலிருந்து 45 நாட்களுக்குள் செல்லதக்கதாக வங்கி வரைவுகள் இருத்தல் வேண்டும்.
9. மேற்கண்ட பணிகளுக்குரிய ஒப்பந்தபுள்ளி படிவங்களை அஞ்சலில் பெற விரும்புவோர் வேலை நாட்களில் ஒப்பந்தப்புள்ளி அட்டவணை (Schedule) கட்டணத்திற்கு கூடுதலாக ஒவ்வொரு ஷெட்யூலுக்கும் ரூ.25/– செலுத்தவேண்டும். தபால் வழி தாமதங்களுக்கு கருங்குழி பேரூராட்சி செயல் அலுவலர் பொறுப்பேற்க இயலாது.
10. ஒப்பந்தப்புள்ளி ஏற்பளிக்கப்பட்ட படிவத்தில் பிணை வைப்புத் தொகையின்றி அனுப்பப்பட்டதை நடவடிக்கையின்றி தள்ளுபடி செய்யப்படும், என தெரிவிக்கப்படுகிறது.
11. இதர விவரங்களை ஒப்பந்தப்புள்ளி படிவத்தில் பார்த்து தெரிந்து கொள்ளலாம்.
12. ஒப்பந்ததாரருக்கு வேலை உத்திரவாதமான பின்னர் அவ்வேலையின் மதிப்பீட்டிற்கு 4% பிணைத் தொகையை செலுத்திய பின்னரே பணி ஆணை வழங்கப்படும்.

(அரசாணை எண். 1729/நாள். 29.12.1992)

| | |
|---|---|
| வகுப்பு – 1 | ரூ. 25.00 லட்சத்திற்கு மேல் |
| வகுப்பு –2 | ரூ. 25.00 லட்சம் வரை |
| வகுப்பு –3 | ரூ. 10.00 லட்சம் வரை |
| வகுப்பு –4 | ரூ. 5.00 லட்சம் வரை |
| வகுப்பு –5 | ரூ. 2.00 லட்சம் வரை |

## முக்கிய நிபந்தனைகள்

1. ஒப்பந்ததாரர்கள் ஒப்பந்தபுள்ளியில் கலந்து கொள்ளும்போது, ஒப்பந்ததாரரின் நிதிநிலைமை, பொருளாதார நிலை குறித்த அறிக்கையும் சமர்பிக்க வேண்டும்.
2. ஒப்பந்ததாரர்கள் கடந்த ஐந்து ஆண்டுகளில் செய்து முடித்த சாலைப்பணிகள் விவரங்கள் ஆண்டுவாரியாக தாக்கல் செய்ய வேண்டும்
3. மற்ற விவரங்களை அலுவலக நாட்களில் அலுவலக நேரத்தில் கேட்டு தெரிந்து கொள்ளலாம்.
4. டெண்டரில் குறிப்பிட்ட பணிகளுக்கு தனித்தனியாக வங்கி வரைவாகவோ/ ரொக்கமாகவோ வைப்புத் தொகையினை செலுத்தி டெண்டர் படிவத்துடன் இணைக்கப்பட வேண்டும். டேவணித் தொகை செலுத்தாமலும் காலம் கடந்து வருவதுமான டெண்டர்கள் நிராகரிக்கப்படும்.
5. நாளது தேதி வரையிலான வருமானவரி சான்று மற்றும் ஜி.எஸ்.டி வரி சான்று செலுத்தியதற்கான ஆதாரம் இணைக்கப்பட வேண்டும்.
6. ஒப்பந்தபுள்ளிகள் குறித்து பேரூராட்சி மன்ற முடிவே இறுதியானதாகும்.
7. பணிகளுக்கு வேலை உத்திரவு பெற்றவுடன், எதிரே குறிப்பிடப்பட்டுள்ள காலவரைக்குள் பணிகள் செய்து முடிக்கப்பட வேண்டும்.
8. செல்வநிலை சான்று உள்ள ஒப்பந்ததாரர்கள் மட்டுமே ஒப்பந்தத்தில் கலந்துக்கொள்ளப்பட வேண்டும்.
9. இப்பேரூராட்சியில் 2021–22 ஆம் ஆண்டு தொழில்வரி செலுத்திய ரசீது இணைக்கப்பட வேண்டும்.
10. ஒப்பந்தத்தில் குறிப்பிடப்படும் வேலைகள் நடைபெறும் போது இயற்கை இடர்பாடுகள், மற்றும் விபத்துகள் நடைபெறும்போது ஏற்படும் நட்டத்தினை ஒப்பந்ததாரரே பொறுப்பேற்க வேண்டும். இழப்பிற்கான காப்புறுதி செய்து கொள்ள ஒப்பந்ததாரர் கடமைப்பட்டவராவார். எனவே அதற்கான சம்மதம் தெரிவிக்கப்பட வேண்டும்.
11. ஒப்பந்ததாரரால் செய்யப்படும் வேலைகள் மற்றும் பொருட்களுக்கு தர நிர்ணய சான்றுகோரும் பட்சத்தில் பெற்றுத் தரப்பட வே ண்டும்.

12. இந்த பேரூராட்சியில் ஒப்பந்தத்தில் இரண்டு முறை கலந்து கொண்டு ஒப்பந்த நமுனா பெற்று ஒப்பந்தத்தில் கலந்து கொள்ளவில்லை எனில் அத்தகைய ஒப்பந்தப்புள்ளிகள் தள்ளுபடி செய்யப்படும்.
13. பதிவு செய்யப்பட்ட ஒப்பந்ததாரர்களின் சொத்து மதிப்பிற்கேற்ப கீழ்கண்டவாறு தரம் பிரித்து ஒப்பந்தபுள்ளியில் கலந்து கொள்ள அனுமதிக்கப்படும்.

செயல் அலுவலர்
கருங்குழி பேரூராட்சி
செங்கல்பட்டு மாவட்டம்

**பெறுநர்**

பதிவு செய்யப்பட்ட அனைத்து ஒப்பந்ததாரர்கள்.
கருங்குழி பேரூராட்சி

**நகல்**

1. பேரூராட்சிகள் ஆணையர், பேரூராட்சிகள் ஆணையரகம், சென்னை –28அவர்களின் மேலான தகவலுக்காக பணிந்து அனுப்பப்படுகிறது.
2. செங்கல்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவர், அவர்களின் மேலான தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது.
3. காஞ்சிபுரம் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர் அவர்களின் மேலான தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது.
4. மதுராந்தகம் சட்டமன்ற தொகுதி உறுப்பினர் அவர்களின் மேலான தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது.
5. பேரூராட்சிகள் உதவி இயக்குநர், காஞ்சிபுரம் மண்டலம், அவர்களின் தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது.
6. செங்கல்பட்டு மாவட்டத்தில் உள்ள அனைத்து பேரூராட்சி செயல் அலுவலர்கள் (பேரூராட்சி அலுவலக விளம்பர பலகையில் ஒட்டி பிரசுரம் செய்ய)
7. உதவி செயற்பொறியாளர், காஞ்சிபுரம் மண்டலம் அவர்களுக்கு மேல் நடவடிக்கைக்காக அனுப்பப்படுகிறது.
8. கருங்குழி பேரூராட்சி தலைமையிட இளநிலை பொறியாளர் அவர்களுக்கு உரிய நடவடிக்கைக்காக அனுப்பப்படுகிறது.
9. கருங்குழி பேரூராட்சி மன்ற தலைவர், துணைத்தலைவர் மற்றும் மன்ற உறுப்பினர்களின் தகவலுக்கு.
10. அலுவலக விளம்பர பலகைக்கு.
11. கோப்பு